UAPA.No.127/2023

**PW.1** அப்துல் ரஹ்மான்

03-02-2026 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ், ஆங்கிலம் இரண்டும் எழுத படிக்க தெரியாது. ஆனால்பேசினால் புரிந்து கொள்வேன். எனது தாய்மொழி மலையாளம் ஆகும். எனது மனுவானது ஆங்கிலத்திலும், பிரமாண வாக்குமூலமானது தமிழிலும் டைப் செய்யப்பட்டு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் துணி வியாபாரம் செய்து வருகிறேன். இந்த மனுவானது எனது பெயரில்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.த.சா.ஆ.2 மற்றும் 3 விற்கிரைய ஆவணங்களில் எனது பெயர் மட்டும் அல்லாமல் என்னுடைய நான்கு சகோதரர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதனால் மனு சொத்தானது ஐவருக்கும் பாத்தியம் என்று சொன்னால் சரிதான். ஆனால் எனது மற்ற சகோதரர்களை நான் இந்த மனுவில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனது நான்கு சகோதரர்களிடம் அனுமதி எதுவும் பெறாமல்தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் போலீசார் எனக்கு மட்டும்தான் அறிவிப்பு அனுப்பினார்கள். அதனால் மனுவை எனது பெயரில் நான் தாக்கல் செய்தேன். மனுச் சொத்தில் தடை செய்யப்பட்ட இயக்கமான பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பு நடந்து

வந்தது என்று சொன்னால் சரிதான். பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பு அகில இந்திய அளவில் ஒரு அமைப்பு என்று சொன்னால் சரிதான். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் 14-10-2022 ஆம் தேதிய ஆவணத்தின்படி மனு சொத்தின் தரை தளத்திலிருந்து 198 பொருட்களும், முதல் தளத்திலிருந்து 203 பொருட்களை போலீசார் கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள இரண்டு இணைப்புகளிலும் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். அந்த ஆவணம் **எ.ம.சா.ஆ.1** ஆகும். மனு சொத்தில் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பு என்று போலீசார் அறிவிப்பு ஒட்டினார்கள் என்று சொன்னால் எனக்கு அதை பற்றி தெரியாது. நான் கூறுவது தவறு என்றும், போலீசார் ஒட்டிய அறிவிப்பை பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றும், அதன் அடிப்படையில்தான் நான் இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. மனு சொத்தானது தரைதளம் 1000 சதுரடியிலும், முதல் தளம் 600 சதுரடி கொண்டதாக மொத்தமாக 1600 சதுரடி கொண்டது என்று சொன்னால் சரிதான். மனு சொத்தானது கோவையின் மையப் பகுதியான டவுன்ஹால் பகுதியில் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். மனு சொத்து அமைந்துள்ள பகுதியானது மக்கள்அதிகம் நடமாடும் பகுதியாகவும், பேரூந்துகள் அதிகமாக வந்து செல்லும் பகுதியாகவும் உள்ள இடம் என்று சொன்னால் சரிதான். வாடகையை பெறும்பொழுது நாங்கள் ரசீது கொடுக்கும் பழக்கம் இல்லை. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பு

Societies registration Act ன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பு என்று சொன்னால் சரிதான். அதனால் அவர்களை நான் வாடகைக்கு விடும்பொழுது அவர்களுக்கு ரசீது கொடுக்கவேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது என்று சொன்னால், சரிதான். ஆனால் அவர்கள் அலுவலகம் நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டதால் நான் ரசீது எதுவும் கொடுக்கவில்லை. சோஷியல் சர்வீஸ் அவர்கள் செய்கிறார்கள் என்ற எண்ணத்தில் அவர்களுக்கு மிக குறைந்த வாடகைக்கு நான் விட்டிருந்தேன். மனு சொத்தில் தடை செய்யப்பட்ட இயக்கம் நடத்துவதற்கு நான் எவ்வித வாடகையையும் பெற்று கொள்ளாமல் இருந்தேன் என்று சொன்னால், சரியல்ல. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பு ஒரு மத சம்மந்தப்பட்ட அமைப்பு என்று சொன்னால் சரிதான். மாத வாடகையை எனக்கு நேரடியாக தொகையாக கொடுத்து விடுவார்கள். எ.ம.சா.ஆ.1ன் அடிப்படையில் இரண்டு இணைப்புகளில் கைப்பற்றப்பட்ட பொருட்களில் " இன்சா அல்லா ஒருநாள் பாபரின் மஸ்ஜித் மீண்டும் அமைக்கப்படும் " என்ற ஒரு போர்டும் இருந்தது என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. இன்சா அல்லா என்பது ஒரு மதத்தை சார்ந்த சொல் என்று சொன்னால் சரிதான். பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பிற்கு உதவி செய்வதற்காக நான் மனு சொத்தை வாடகைக்கு விட்டிருந்தேன் என்றும், அதனால்தான் குறைந்த வாடகையாக ரூ.10,000/- வாடகை பெற்றதாக நான் குறிப்பிட்டிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக மனு சொத்து அமைந்துள்ள இடமானது ஒரு

சதுரடிக்கு வாடகை குறைந்தது ரூ.100/- அளவிற்கு இருக்கும் என்றும்,அதன் அடிப்படையில் பார்த்தால் 1600 சதுரடி கொண்ட எங்கள் இடத்திற்கு ரூ.1,60,000/*- வாடகை வரும் என்றும், ஆனால் வேண்டுமென்றே அந்த அமைப்பிற்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் மிக குறைந்த தொகையான ரூ.10,000/- வாடகைக்கு விட்டதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். எனது மனுவில் நான் எந்த அமைப்பையும் சேராதவர் என்றோ, அந்த அரசியல் அமைப்பிலும் ஈடுபாடு கிடையாது என்றோ நான் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால், சரிதான். 5 வது எதிர்மனுதாரர் அப்துல்லாவை எனக்கு தெரியும். அவர் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா கோயமுத்தூர் பிரிவு செயலாளர் என்று சொன்னால் எனக்கு அதை பற்றி தெரியாது. அலுவலகம் நடத்தவேண்டும் என்று எங்களது கட்டிடத்தை வாடகைக்கு கேட்டதால் நாங்கள் கொடுத்தோம். பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பு என்ற காரணத்தினால் எனது கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ள சீலினை அகற்றவேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. மனு சொத்தில் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பானது 2012 லிருந்து இயங்கி வந்தது. அதன் பின்னர் 2022 ல் கட்டிடத்திற்கு சீல் வைக்கப்பட்டது. முதலில் ரூ.5000/- வாடகையாக கொடுத்தார்கள். 2022 ல் ரூ.10,000/- ஆக மாத வாடகை வாங்கி கொண்டிருந்தோம். போலீசார் மனு சொத்தை ஆய்வு செய்து பொருட்களை கைபற்றி அந்த

ஆவணத்தில் நானும் ஒரு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளதால் அந்த சீலை அகற்றவேண்டுமென்று நான் மனு தாக்கல் செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பை தடை செய்தது மத்திய அரசு என்று சொன்னால் சரிதான். மத்திய அரசை இந்த மனுவில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் நான் தாக்கல் செய்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. ஆரம்பத்தில் 2012 ல் மாத வாடகை ரூ.5000/-த்திற்கு பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பு கொடுத்து வந்ததாக நான் மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**( 3 முதல் 5 எதிர்மனுதாரர்களின் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

sd/ அப்துல் ரஹ்மான்

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.